# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 62/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாபு | மதம் | : |
| த/பெ | : கண்ணய்யா நாயுடு | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**29.08.2024**

**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

1. ஏற்கனவே வாதியை குறுக்கு விசாரணை செய்த போது காவல் நிலையத்தில் கொடுத்த சம்மத கடிதம் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **15.05.2012 ம்** தேதியிட்ட என் மனைவிக்கு அவரது பெற்றோர் எழுதி வைத்த பதிவு செய்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்திற்கான புல வரைபடம், SLR அடங்கிய கோப்பின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம், SLR அடங்கிய கோப்பு பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 19.11.1969ம் பதிவு செய்த உயில் மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(உயில் பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாவா சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(புல வரைபடம் பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)